**கரந்தெனிய பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரில் 06 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 17 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து கரந்தெனிய பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 12,430,693 தொகைக்காக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சரியாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020 கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 2017 ஆண்டின் போது சம்பளமற்ற விடுமுறைக்காக அறவிடப்பட்டிருந்த ரூபா 212,911 ற்கான தொகை சம்பளம் மற்றும் ஊதியச் செலவுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | பிரதேச சபை எல்லை பெயர் பலகை தயாரிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 240,000 தொகை காணி கட்டடங்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | சரியான தலைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் போது சீசீடிவி கமரா முறைமை ஒன்று பொருத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகளில் ரூபா 230,000 ற்கான தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | சரியான தொகுதியின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (உ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 31,100 ற்கான தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | சரியாக நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது முத்திரைக் கட்டணம் குறைவாக கணித்தல் ரூபா 1,292,391 தொகை இரண்டு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 04 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் / அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 868,821 இற்கான வித்தியாசம் ஒன்று காட்டப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீண்ட காலமாக காணப்படும் சமமின்மை என்பதால் எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) பெறவேண்டிய கணக்கு** | | |
| (i) 05 வருடங்களை விட மிகையான கூட்டுத்தொகை ரூபா 2,339,889 தொகைக்கான 07 நிலுவை மீதிகள் மற்றும் 01 வருடம் முதல் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட | நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 2,754,134 ற்கான 05 வருமான நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ii) 2015 ஆண்டின் போது எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றிற்கு வழங்கியிருந்த ரூபா 151,800 ற்கான வைப்பினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உடன்படிக்கை முடிவடைந்துடன் வைப்பு மீதிகள் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) செலுத்தவேண்டிய கணக்கு**

| | | |
|---|---|---|
| (i) 2015 ஆண்டிற்கு முன்னர் இருந்து கணக்குகளில் காட்டப்பட்டுள்ள செலுத்தப்பட வேண்டிய கடன் வட்டி ரூபா 727,224 தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள் தீர்க்கப்படும் என அறிவிக்கின்றேன். |
| (ii) 2012 ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகள் தொடர்பான பெறுமதி கூட்டிய வரி ரூபா 11,423,376 தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படாமல் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

**தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 121,053,328 தொகைக்கான 11 கணக்கு விடயங்களுக்குரிய தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) பாராளுமன்ற சட்டங்கள் | | | |
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134 (1) மற்றும் (2) | முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை வீதவரி வலையங்கள் என வெளியிடப்பட்டு வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரிவின் பிரகாரம் வீதவரி வலையங்கள் வெளியிடப்பட்டு வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்க எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் வீதவரி அறவிடப்படும் என அறிவிக்கின்றேன். |
| (ஆ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 33 | வீதவரி செலுத்துவதை புறக் கணித்துள்ள நபர்கள் தொடர் பான அட்டவணை மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை அட்டவணை தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் எழுத்தாணை வழங்கப்பட்டு நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) விதி 193 | பாதீட்டுடன் வரவு மற்றும் செலவு விடயங்களை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைக்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) விதி 218 | சபைக்குச் சொந்தமான அனைத்துக் காணிகள் மற்றும் கட்டடங்களை வருடாந்தம் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>--------------------------------------- | | | |
| | (i) நிதிப்பிரமாணம் 102 – 110 | காணாமல் போதல் மற்றும் சேதமடைதல் தொடர்பாக நடவடிக்கை எடுத்து, குறிப்பிட்ட அறிக்கை கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்காததுடன், நட்டங்கள் சேதங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| | (ii) நிதிப்பிரமாணம் 104 – 109 | சபையின் டபல் கப் வண்டி 2018 ஆகஸ்ட் 23 திகதி விபத்துக்குள்ளாகி திருத்த வேலைக்காக ரூபா 353,164 தொகை செலவாகியிருந்த போதிலும், இந்த விபத்து தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| | (iii) நிதிப் பிரமாணங்கள் 1645 மற்றும் 1646 | வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 12 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கின்றேன். |

## 2 நிதி மீளாய்வு

---------------------

### 2.1 நிதி விளைவுகள்

---------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 635,648 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 17,479,978 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 3,337,800 | 2,988,790 | 2,580,090 | 4,540,050 | 3,537,600 | 2,890,690 | 2,794,173 | 4,143,785 |
| வாடகை | 6,592,550 | 6,897,228 | 6,849,361 | 5,006,439 | 6,836,500 | 5,809,826 | 4,639,494 | 8,774,251 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 450,000 | 352,829 | 352,829 | 123,350 | 400,000 | 152,250 | 154,250 | 123,500 |
| ஏனைய வருமானங்கள் | 4,036,000 | 3,024,989 | 3,024,989 | 45,192 | 3,113,000 | 2,907,872 | 2,907,872 | 45,192 |
| | 14,416,350 | 13,263,836 | 12,807,269 | 9,715,031 | 13,887,100 | 11,760,638 | 10,495,789 | 13,086,728 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| (i) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 4,084,152 தொகைக்கான வீதவரித் தொகையில் ஆண்டின் போது அறவீடு செய்தல் ரூபா 621,971 தொகை அதாவது 15 சதவீதம் ஆகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பிரதான அலுவல அதிகாரப் பிரதேசத்தில் ரூபா 548,007 தொகை மற்றும் உப அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் ரூபா 2,901,097 தொகை ஆக நிலுவை வீதவரி மீதிகள் காணப்பட்டன. உப அலுவலக | நிலுவை வரி அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

அதிகார பிரதேசத்தின் நிலுவை வீதவரி மீதியில் 05 வருடங்களை மிகைத்துள்ள நிலுவை ரூபா 1,216,243 தொகை மற்றும் ரூபா 10,000 மிகைத்துள்ள 35 நிலுவை அலகுகளில் இருந்து கூட்டுத்தொகை ரூபா 662,025 தொகை காணப்பட்டது.

**(ஆ) ஏக்கர் வரி**

------------------

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 87,327 தொகையான ஏக்கர் வரித் தொகையில் ஆண்டின் போது ரூபா 4,421 தொகை அறவிடப்பட்டிருந்தது. அதாவது நூற்றிற்கு 05 சதவீதமாகிய குறைந்த பெறுமதியாகும். | நிலுவை வரி அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) நீர் வரி**

-------------

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 826,890 தொகையாகும். முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்காக ரூபா 1,535,807 தொகை சேகரிக்க வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 582,560 தொகை அதாவது 38 சதவீதம் மாத்திரமே. | நிலுவை வரி அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**(ஈ) களியாட்ட வரி**

------------------------

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக மதிப்பிடப்பட்ட களியாட்ட வரி வருமானம் ரூபா 250,000 தொகையாக காணப்பட்டதுடன், சிட்டையிடப்பட்ட மற்றும் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 40,000 தொகையாகும். | மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக மேற்கொள்ளப் பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) கடை வாடகை** | | |
| மீளாய்வாண்டிற்கான சிட்டையிடல் ரூபா 3,278,729 தொகை காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது சேகரிக்க வேண்டிய ஒட்டுமொத்த கடை வாடகை வருமானம் ரூபா 10,515,883 தொகையாகும். ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 3,366,783 தொகை அதாவது 32 சதவீதம் ஆகிய குறைந்த பெறுமதியாகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| **(ஆ) வியாபார உரிமையை வாடகைக்கு கொடுத்தல்** | | |
| (i) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை மீன் விற்பனை நிலைய வாடகை மீதி ரூபா 193,034 தொகையாகும். | வருமானம் நிலுவை விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலுவையாக காணப்பட்ட சந்தை வாடகை வருமானம் ரூபா 518,434 தொகையாக இருந்ததுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 352,299 தொகையாகும். அதன்படி ஆண்டிற்காக அறவிடப்பட வேண்டிய ஒட்டுமொத்த சந்தை வாடகை வருமானம் ரூபா 4,041,433 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 3,386,399 தொகை ஆகும். அதன்படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை சந்தை வாடகை ரூபா 655,034 தொகையாகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

2.2.5 **நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 845,733 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 31,627,950 தொகை பெறவேண்டிக் காணப்பட்டது. | பெறவேண்டிய நிலுவை வருமானம் விரைவாக அறவிடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

3 **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) **செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டிருந்த துணை விதிகளின் படி சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் தொடர்பாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுப்பேன். |

(ஆ) **திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| குப்பை முகாமைத்துவம் தொடர்பாக முறையான வேலைத்திட்டம் ஒன்று செயற்படுத்தியிருக்கவில்லை. | குப்பை அகற்றுவதற்காக முறையான மற்றும் நீண்ட கால வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | காணியொன்று பெறப்பட்டு எதிர்காலத்தில் குப்பை அகற்றுவதற்காக வேலைத்திட்டமொன்று செயற்படுத்துவேன் என அறிவிக்கின்றேன். |

### (இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்திக்கான நீண்ட காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும். | அதிகாரப் பிரதேச பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கப்படும் என அறிவிக்கின்றேன். |

## 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது வீதி விளக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,631,264 ற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், சுமார் 5,000 வீதி விளக்குகளை பராமரிக்கப்பட்டிருந்த போதிலும், 2008 ஆண்டின் பின்னர் மின்சார சபையுடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் வீதி விளக்குப் பராமரிப்புக்கான செலவுகளை மீளளிப்பு செய்ய முடியாமலுள்ளது. | மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற்கொண்டு வீதி விளக்கு பராமரிப்புத் தொகையினை பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மஹரதன்ட கடையறைகளில் இருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ஒரே தடவையில் செலுத்தும் பணம் ரூபா 21,896,750 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | ஒரே தடவையில் செலுத்தும் பணத்தை அறவீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | ஊரகஸ்மன்ஹந்திய அஞ்சல் அலுவலகத்திற்கு அண்மையில் காணப்பட்ட வர்த்தகக் கடைத்தொகுதியில் 03 கடைகள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் சபைக்கு உழைக்கக் கூடியதாக இருந்த வருமானம் ஒன்றினை இழந்துள்ளது. | கடையறைகளை வாடகைக்கு கொடுத்து வருமானம் உழைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| (i) மிகையாக காணப்பட்ட பதவியொன்றினை முறைப்படுத்துவதற்கும், ஆரம்ப பிரிவின் 15 பதவிகளில் காணப்பட்ட பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) பதவியணித் திட்டத்தின் படி அங்கீகரிக்கப்பட்டிருந்த முகாமைத்துவ உதவியாளரின் எண்ணிக்கை 07 ஆகக் காணப்பட்ட போதிலும் உள்ளவாறான எண்ணிக்கை 08 ஆக இருந்தது. மேலும் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு உரிய கடமையை அணவல் செய்வதற்காக நூலக உதவியாளர் மற்றும் வேலை / வெளிக்கள தொழிலாளர்கள் இருவர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | அமைய மற்றும் பிரதியீட்டுப் பதவிகள் முறைப்பிரகாரம் சேர்க்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் முறைப்பிரகாரம் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) மருந்துக் கலவையாளர் இரண்டு பதவிகள் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் இரண்டு ஆயுர்வேத நிலையங்களின் மருந்து வழங்கும் கடமைகளுக்காக நிரந்தர வேலை / வெளிக்கள தொழிலாளர் ஒருவர் மற்றும் அமைய பெண் ஊழியர் ஒருவருக்கு சாட்டப்பட்டிருந்தது. | தகைமையுடைய உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| சபையின் உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்கள் 50 பேருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 736,456 தொகையான ஊழியர் கடனை அறவீடு செய்திருக்காததுடன், அக்கடன் மீதியில் காணப்பட்ட ரூபா 412,323 தொகை 2011 ஆண்டிற்கு முன்னர் இருந்து அறவிடப்படாமல் காணப்பட்டது. | நிலுவை ஊழியர் கடன் அறவிடப்பட வேண்டும். | தகவல்களைப் கண்டறிந்து ஊழியர் கடனை அறவீடு செய்வற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) சொத்துக்களை உரித்தாக்காமை** | | |
| மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிலிருந்து 1999 ஆண்டின் போது வழங்கியிருந்த கப் வண்டியை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| **(ஆ) விளைவற்ற சொத்துக்கள்** | | |
| (i) இலக்கம் காணப்படாத நீர் பவுஸர், டிரக்டர் டேலர், மின் தொழிநுட்ப வேலைக்காக பயன்படுத்தப்படும் ஹாடிமெக் இயந்திரம் 05 வருடங்களுக்கு மிகையான காலம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | அப்புறப்படுத்துவதற்கு அல்லது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அப்புறப்படுத்த நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) 2015 ஆண்டிற்கு முன்னர் சேதனப் பசளை உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட குப்பை அரிக்கும் இயந்திரம் ஒன்று மற்றும் குப்பைகளை துண்டாக்கும் இயந்திரம் ஒன்று விளைவற்றுக் காணப்பட்டது. | குப்பை அகற்றுவதற்காக முறையான மற்றும் நீண்ட கால வேலைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | காணி ஒன்று பெற்றுக்கொண்டு குப்பைகளை அகற்றுவதற்காக எதிர்காலத்தில் முறையான வேலைத்திட்டம் ஒன்று செயற்படுத்தப்படும் என அறிவிக்கின்றேன். |
| **(இ) குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்** | | |
| 2015 ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 24,928,666 தொகை பெறுமதியான மோட்டர் கிரேடர் சபைக்கு கிடைத்த நாள் முதல் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அப்புறப்படுத்துவற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழுக் கூட்டம் ஒன்று மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | காலாண்டுக்கு ஒன்று வீதம் நடாத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுவேன். |